**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 136/2020**

**Date : 21.01.2026**

**பி.வா.சா.1 - பாலகிருஷ்ணன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

பி.வா.சா.ஆ.11 ஊனமுற்றோர் அடையாள அட்டையில் எனது பெயர் பாலகிருஷ்ணன் என்பது ஏற்கனவே இருந்து அழிக்கப்பட்டு அதற்கு மேல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11ல் ஜெயலெட்சுமியின் வீட்டு கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் அனைத்திலும் எனது வீட்டு முகவரியை தான் கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ.11 ஆவணம் வழக்கிற்காக பெயரை திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 புகைப்படங்கள் வழக்குபட்டிகை சொத்திலுள்ள கட்டிடத்தின் புகைப்படங்கள் என காட்டுவதற்கு கதவு எண்ணோ, அருகில் உள்ள வீடுகளோ, தார்ரோடோ காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 புகைப்படங்களில் உள்ள வழக்கு பட்டிகை சொத்து இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக ராஜாக்கமங்கலம் காவல்நிலையத்தில் யார் புகார்கொடுத்தார் என்றால் நான் புகார் கொடுத்தேன். வாதியின் பவர்தாரர் செல்வராஜும் என்மீது ராஜாக்கமங்கலம் காவல்நிலையத்தில் புகார்கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் இருதரப்பினரும் பேசியபின்பு சொத்து தொடர்பான சம்பவம் என்பதால் நீதிமன்றத்தை அனுகுங்கள் என்று அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு சுமார் எவ்வளவு வருட பழமையானது என்றால் சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். 40 ஆண்டுகளில் மேற்படி வீடு உடைந்து திரும்ப கட்டப்பட்டதா என்றால் இல்லை. காற்றினால் வீடு உடைந்தது சேதமடைந்தது என்று

கூறினால் அது தவறு என்றால் சரிதான்.

ஜெயலெட்சுமி குடியிருந்த வீடு காற்றினால் சேதமடைந்தது அதனை சரிசெய்ய வேண்டும் என்றும் அவர்களுக்கு மருத்துவ செலவுகள் மற்றும் இதரசெலவினை செய்து பராமரிக்க வேண்டி ஜெயலெட்சுமிக்கு என்னை பாதுகாவலராக நியமிக்க கோரி MHOP 144/2017 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி MHOP 144/2017 ல் ஜெயலட்சுமிக்கு உரிமைப்பட்டதாக சொல்லியுள்ள வீடு வழக்கு பட்டிகை வீடு அல்ல என்றல் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் எனது சகோதரர் பழனிவேல்ராஜனோ அல்லது அவரது மனைவி ஜெயலெட்சுமியோ, நானோ தாமசித்து வந்ததாக காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்யலாம். என்ன ஆவணம் தாக்கல் செய்யலாம் என்றால் புகைப்படங்கள் தான் தாக்கல் செய்ய இயலும். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் எனது சகோதரர் பழனிவேல்ராஜனோ அல்லது அவரது மனைவி ஜெயலெட்சுமியோ, நானோ தாமசித்து வந்ததாக காண்பிப்பதற்கு எவ்வித ஆவணமும் இல்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கு புறம் அழகம்மைக்கு சொந்தமான சொத்தும் வீடும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு மேற்குபுறமாக உள்ள இவ்வழக்கின் அதிகார முகவரின் சொந்தமான சொத்திற்கு செல்ல வழக்கு பட்டிகை சொத்தோ அழகம்மை பெயரிலான சொத்தோ வழிபாதையாக இல்லை என்றால் சரிதான். ஆழகம்மையின் மகன் தான் அதிகாரம் பெற்ற முகவர் என்றால் சரிதான். அதிகார முகவரின் சொத்திற்கு செல்ல பெரிய பாதை வேண்டுமென்று அவர் கருதினால் அழகம்மை சொத்து வழியாக அமைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். அதிகாரமுகவரின் சொத்திற்கு

செல்வதற்காக வேண்டி வழக்கு பட்டிகை சொத்தை காண்பித்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கமலத்திற்கு வேறு வீடு இருப்பதாக கூறியுள்ளேன் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது என்னிடம் இல்லை. கமலத்திற்கு வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்தக்கள் இல்லை என்றால் சரயல்ல.

இவ்வழக்கில் நான் முதல்விசாரணை தாக்கல் செய்வதற்கு முன்பே கமலம் இறந்து விட்டார் என்றால் சரிதான். ஆனால் முதல் விசாரணையில் கமலம் காஞ்சிரவிளை நியாயவிலைக்கடையில் பொருட்கள் வாங்கிவருவதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனக்கோ, பழனிவேல் ராஜனுக்கோ அவரது மனைவி ஜெயலெட்சுமிக்கோ வழக்கு பட்டிகை சொத்தில் எவ்வித உரிமையோ, அனுபவமோ, ஆவணமோ எக்காலகட்டத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தான் வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை ஆவணங்களும், அனுபவமும் இருந்து வருகிறது ஆகையால் வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் தண்டத்தீர்வை என்றாலும் வழக்குபட்டிகை சொத்திற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி முடிக்கப்படுகிறது.**

**வாதி தரப்பில் மறு விசாரணை.**

2025 ல் நான் அதிகார முகவர் மீது ராஜாக்கமங்கலம் காவல்நிலையத்தில் வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் மறு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

2025 ல் புகார் கொடுத்ததற்காக மனு ரசீதோ அல்லது முதல் தகவல் அறிக்கையோ பதிவு செய்தார்களா என்றால் மனுவை ஏற்கவில்லை ரசீது கேட்டபோது ஒருவாரம் கழித்து ரசீது கொடுத்தார்கள் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கூறியபடி எவ்வித புகாரும் கொடுக்கவில்லை எவ்வித ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**